
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 3 | ஆகஸ்டு 1990 | இதழ் 8

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர்:-

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

**2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00. சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றுட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1) ஊழியர்கள் சிந்தனைக்கு ! 1
2) வேத வசனத்தின்படி நீர் கிறிஸ்தவரா? 7
3) சபையைப் பற்றிய கவலை என்னை நாள் தோறும் நெருக்குகிறது 14
4) கிறிஸ்தவன் என்றால் யார்? 20
5) திருமணம் 25

// THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity:

Vol 3. Aug—1990 Issue 8

**ஆசிரியவுரை**

# ஊழியர்கள் சிந்தனைக்கு!

ஊழியர் ஒருவரை அண்மையில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். அவருடைய உரையாடலில் அடிக்கடி ஊழியர்களின் தற்காப்பின்மையைப் பற்றிக் கவலை தெரிவித்தார், நமக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஒரு பிராவிடண்ட் பண்டா? பென்ஷனு? பிள்ளைகளுக்கு ஏதாவது சலுகையா? ஒன்றுமே கிடையாது. நாளைக்கு திடீர் என்று ஏதாவது வந்து விட்டால் குடும்பம் என்னாவது என்று அங்கலாய்த்தார்.

அவரைக் குறை கூறவில்லை. தற்காப்பு உணர்வு இயற்கையானது. ஆனால் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு, நாம் அழைக்கப்பட்ட நோக்கத்தை உதாசீனம் செய்வது நியாயமா? ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்: ஒரு ஊழியனின் நலன்கள் பாதுகாக்கப்படுவது, அவர் தேவனுடைய நலன்களைப் பேணுவதில் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. (மத்-10:39) ஒரு ஊழியன் தேவனை விட்டு விலகாதிருக்கும் வரையிலும், தான் கை விடப்படுவேன் என்றோ, பிறர் நமக்குத் தீமை செய்து விடுவார்கள் என்றோ அஞ்சத்தேவையில்லை. (ரோமர் 8:31) அப்படியே அவர்கள் தீமை செய்தாலும், அதையே நமக்கு நன்மையாக மாற்றித்தர தேவனால் ஆகும். (ஆதி 50:20) ஆகவே, பலன் அளிக்கிறவர் தேவன் என்ற விசுவாசத்துடன் அவரது சித்தத்தை நிறைவேற்ற தைரியமாய் உழைக்க வேண்டும்.

மேலும், ஊழியத்தில் மனிதரைப் பிரியப்படுத்தும் போக்கு அதிகமாகத் தென்படுவதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

மனிதரைப் பிரியப்படுத்துவது தவறு என்று கூறவில்லை. ஆனால் மனிதர் பாராட்ட வேண்டுமென்றோ அல்லது உதவி செய்கிறவர்களைப் பிரியப்படுத்த வேண்டுமென்று சத்தியத்துக்கு முரணாகக் காரியங்களைச் செய்வது ஆரோக்கியமான முறை அல்ல. முதல் நூற்றாண்டு ஆத்தும ஆதாயப் பணியாளர்கள் தேவனைப் பிரியப்படுத்துவதை மட்டுமே இலட்சியமாக கொண்டிருந்தனர்.

பெரும்பான்மை மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு அல்லது அதிகார வர்க்கங்களின் போக்குக்கு எதிராக ஒரு போதனையைப் புகுத்துவது எளிதல்ல. ஆனால் அப்போஸ்தலர்களும் தேவ ஊழியர்களும் பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தேவனுடைய சித்தத்திற்கிசைவாகப் போதித்தது, தேவனைப் பிரியப்படுத்துவதில் அவர்களுக்கு இருந்த இலட்சியப் பிடிப்பைக் காட்டுகிறது.

ஸ்நானகன் எரோதுக்கு எதிராக போதித்தார். யோவான் (மத் 14:3,4) அப்போஸ்தலர்கள், **"நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து பேசாமலிருக்கக் கூடாதே, மனுஷருக்கு கீழ்படிகிறதை பார்க்கிலும் தேவனுக்கு கீழ்படிகிறதே அதிக அவசியமாய் இருக்கிறதே"** என்று ஆலோசனை சங்கத் தீர்ப்புக்கு எதிராய் முழங்கினர். (அப் 4:19-20, 5;28) அத்தனே, பட்டணத்தாரை **'நீங்கள் மிகுந்த மத பக்தியுள்ளவர்களாயிருக்கிறீர்கள்'** என்று பாராட்டின பவுல், பின்னர், **நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன்** என்று அவர்கள் அறியாமையைச் சுட்டுகிறார். (அப் 17:22,23) தன்னை நியாயம் விசாரித்துக் கொண்டிருந்த அக்கிரிப்பா இராஜாவை, **தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா?** என்று கேட்டு பவுல் விசுவாச விசாரனை செய்தார். (அப் 26:27-28). இவர்களில் எவரும் மனிதரை பிரியப்படுத்துவதற்காக தங்கள் இலட்சியங்களையோ, சுவிசேஷ செய்தியையோ மாற்றிக் கொள்ளவில்லை தீமையோடு சமரசம் செய்து கொள்ளவில்லை.

மனிதரை பிரியப்படுத்துவதில் சில உடனடிபலன்கள் கிடைக்கின்றன என்பது உண்மைதான். அதிலும் கலாச்சாரத்திற்கு புதியவர்களை பிரியப்படுத்துவது சுலபம். பரமபிதா அருளும் பலனா அல்லது மனிதன் தரும் உதவியா? நித்திய பலனா அல்லது உடனடி பொருளியல் லாபமா? (மத் 6:16-17). **நான் மனுஷரை பிரியப்படுத்துகிறவனாய் இருந்தால் கிறிஸ்துவின் ஊழி-**

யக்காரன் அல்லவே. *(கலா 1:10), எபே 6:6-8)* என்கிறார் பவுல். மேலும் மனிதரைப் பிரியப்படுத்தும் முயற்சியில் கிடைக்கும் உடனடிபலன்களுக்காக தங்கள் சிருஷ்டிகரை துக்கப்படுத்திய சவுல், யூதாஸ் போன்றோர் முடிவில் பெற்ற பலன் என்ன? *(1சாமு 31:4-5, மத் 27:5-7)* சிந்திப்பீர் !

மேலே கூறப்பட்டுள்ள மனநிலைகளினால் ஆத்துமாஆதாயப் பணியாளர் என்ற நிலையிலிருந்து தாழ்ந்து ஊழிய அறிக்கை தயாரிப்பாளராக மாறிவிடும் அபாயம் தோன்றியுள்ளது. பிரிவுக்கூட்ட கும்பல்களில் சிலர் கவர்ச்சி ஊழிய அறிக்கை தயாரிப்பதற்காக மலிவான யுக்திகளையும், விளம்பரங்களையும் கையாண்டு இழிவான ஆதாயம் தேடுகின்றனர். ஏதோ ஒரு காரியத்தைச் சொல்லி மக்களைக் கையுயர்த்தும்படி ஏவி, படம் பிடித்து, இதோ! இவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகரராக ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானத்துக்கு கீழ்ப்படிய ஒப்புக் கொடுத்தவர்கள் என்று அறிவிப்பர். உணவுத் தட்டில் மணலையும், சிறு கற்களையும் குவித்து, அதைப் படம் பிடித்து இவ்வளவு பேருக்கு அன்னதானம் செய்தோம் என்று கூசாமல் கூறுவர். அவர்களைப் பின்பற்றி நாமும் செயல்பட்டால் எப்படி?

அயல் நாட்டுச் சகோதரர்கள் வரும்போதும், அவர்களுடைய ஏஜெண்டுகள் விரும்பும் போதும் ஞானஸ்நானங்களுக்கு ஆள் திரட்டுவதும், சிலர் அவர்கள் முன்னிலையில் மட்டும் ஞானஸ்நானம் எடுக்க விரும்புவதும் நல்ல நடைமுறை அல்ல. இது தவிர்க்கப் படவேண்டும். தவறான தகவல்கள் அடங்கிய கவர்ச்சி அறிக்கைகளும், மலிவான போலி விளம்பரங்களும் கிறிஸ்தவத்தின் சிறப்பு நிலையை மாசுபடுத்தி வருகிறதை உணர்வீர். நமது ஊழியத்தை தேவன் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவரே விளையச் செய்கிறவர், அவரே தக்க பலனளிப்பவர் என்பதை மறந்து விட்டு மனிதரைப் பிரியப்படுத்த நாடகம் ஆடுவது முறையா?(1கொரி 3:10-15)

இவ்விதமான தவறான போக்கினால், ஆத்துமா ஆதாயப் பணியாளர் என்ற நிலை திரிந்து கூலிக்கு மாரடிக்கும் போலிப் பிரசங்கிகளாக மாறிவிடும் அபாயம் தோன்றியுள்ளது. செயலாற்றல் உள்ளவன் செயல்படுகிறான்; கையால் ஆகாதவன் உபதேசம் செய்கிறான் என்றார், அறிஞர் பெர்னாட்ஷா எவ்வளவு உண்மை! வேறு தொழில் செய்ய லாயக்கற்றவன் ஊழியனா? கையால் ஆகாததால் உபதேசமா?

கர்த்தருக்கு ஊழியம் செய்வதை விட உலகில் வேறு சிறந்த பணி இல்லை. ஆனால் அந்தப் பணி நல்ல நோக்கத்தோடு உண்மையாய்ச் செய்யப்படும்போது தான் ஆசீர்வாதம். சிலருக்கு, கர்த்த-

ருடைய ஊழியம் பணம் காய்க்கும் மரமாக மாறி விட்டது. சிலர் நற்செய்தி உரைஞர்களாகத் துவங்கி, மேடைப் பேச்சாளர்களாக மாறி விடுகின்றனர். பிரியமாணவர்களே, நாம் அழிந்து போகும் ஆத்துமாக்களுக்கு **காவலாளிகள்.** சுவிசேஷப் பணியைச் செய்யத் தவறுவோமானால் தேவன் அவர்கள் இரத்தப் பழியை நம் கையில் கேட்பார். (எசே. 3 : 17-21) சத்தியத்தை உத்தமமாய் அறிவித்ததால் பவுல் அநேகருடைய இரத்தப் பழிக்கு நீங்கி சுத்தமானார். (அப் 20:26-27; 18:6)

நாம் கடனாளிகள், சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிட்டால் நமக்கு ஐயோ! (1 கொரி 9:16) தேவன் பாவிகளுக்காய்ப் பரிதவிக்கும்போது, நாம் நமக்காகவே கவலைப்படுவது சரியா? கேவலம்! வயிற்றுப் போஜனத்தைக் கண்டு பிடித்த குஷ்டரோகிகள் அந்த நற்செய்தியை அறிவிக்கத் துடித்தார்கள் என்றால் நாம் ஆத்தும இரட்சிப்பு பற்றிய நற்செய்தியை அறிவிப்பதில் எத்தனை அதிக அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும்? 2 ராஜா 7:9

நம்மில் பலர் வெளி மாவட்டங்களில், மாநிலங்களில் ஏன்? வெளிநாடுகளிலும் சுவிசேஷம் அறிவிக்க விரும்புகிறோம். அது நல்ல எண்ணம் தான். நம்மில் எத்தனை பேர் நமது குடும்பத்தாருக்கும் அயலகத்தாருக்கும் சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறோம்?

அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் துணிவு நமக்கு இல்லையா, அல்லது மனமில்லையா அல்லது அவர்கள் நற்செய்தியை கேட்டுக் கீழ்ப்படிவதற்கு நமது வாழ்க்கை நிலை தடையாக இருக்குமென நினைக்கிறோமா? சிந்திப்பீர் சகோதரரே!

''நோவா **தன் குடும்பத்தை** இரட்சிப்பதற்கு பேழையை உண்டுபண்ணினான்'' (எபி 11:7). நமது கண்ணெதிரில் நரக வழியில் செல்லும் நமது குடும்பத்தாரையும் மற்றவர்களையும் இரட்சிப்புக்குள் கொண்டுவர என்ன செய்திருக்கிறோம்? (1 தீமோ 4:16) சொந்த ஊரில் எந்த தீர்க்கதரிசியும் மதிக்கப்படுவதில்லை என்பதை சாக்காக நாம் பயன்படுத்த வேண்டாம்.

நமது பணியின் முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் உணர தேவன் நமக்கு உதவி செய்வாராக.

**கடைசியாக,** ஆத்தும ஆதாய பணியாளராகிய நாம் மற்றவர்களை ஆதாயப்படுத்தும் வேளையில் தம்மை இழந்துவிடும் அபாயத்தில் இருக்கிறோம்.

மோசே மக்களை வழி நடத்தினார். ஆனால் ஐயகோ! எத்தனை பெரிய துக்கம்! அவர் கானானுக்குள் பிரவேசிக்க முடிய

வில்லை. "**ஆதலால், நிச்சயமில்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்**" என்றார் பவுல் (1 கொரி 9:26-27)

ஒரு ஆத்தும ஆதாயப் பணியாளர் சுயநலவாதியாக, மனிதரைப் பிரியப்படுத்தும் ஊழியராக, உடனடி சரீர நன்மைகளுக்காக, கவர்ச்சி ஊழிய அறிக்கை தயாரிப்பவராக, ஊழியத்தை ஆதாய நோக்கோடு செய்பவராக இருப்பின் அவர் தன் சொந்த ஆத்துமாவை இழந்துவிட வேண்டிய அபாயத்தில் இருப்பார். அப்போஸ்தலர்களும், ஆதிக் கிறிஸ்தவர்களும் தங்களுக்கு லாபமாக இருந்த எல்லாவற்றையும் விட்டு விட்டுக் கர்த்தரைச் சேவிக்க வந்தனர். (மத் 19:27-29; பிலி 3:5-11) நாம், யாக்கோபு கூறியதைப் போல கோலும் கையுமாக (ஆதி 32:10) வெறுமையாய்க் கர்த்தரை சேவிக்க வந்து, வசதியான வாழ்க்கை, அந்தஸ்து, புகழ், செல்வம் ஆகியவற்றைச் சம்பாதிக்கத் துடிக்கிறோம்! இதுவா தியாகம்?! சிலர் இவைகளைத் தவறான வழியில் அடைந்து விட்டுக் கர்த்தர் என்னை ஆசீர்வதித்திருக்கிறார் என்று சொல்லவும் தயங்குவதில்லை. "**பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும் ...... வாங்குகிறதற்கும் இது காலமா?**" (2 ராஜா 5:26-27) இந்த நோக்கங்களுக்காக கர்த்தரைச் சேவிப்பவர்கள் தங்களை இழப்பது நிச்சயம். (மத் 10:39)

அருமை உடன் ஊழியர்களே!

இஸ்ரவேலரும், அவர் தம் சமய, சமுதாயத் தலைவர்களும் உலகியல் பற்றினால் சீரழிந்தனர். இன்றைய கிறிஸ்தவமும் அதனுடைய ஊழியர்களும் உலகியல் கரிசனையால் தங்கள் விசுவாச ஓட்டத்தில் தடுமாறி, தடம்புரண்டு அழிவை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றனர். ஆத்தும பாரம், சபை பற்றிய வைராக்யம் அந்நிய காரியங்களாக மாறிவிட்டன.

ஆத்துமாக்களின் அவலத்தைப் பாரீர்! **ஐயோ, நான் இங்கு வேதனைப்படுகிறேனே! பூமியில் எனக்கு ஐந்து சகோதரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் இந்த வேதனையுள்ள இடத்திற்கு வராமலிருக்க வேண்டுமே** என்ற கூக்குரலைக் கேளீர்!! (மத் 16 : 27-28) சபையின் சீரழிவைக் காணீர்.!!!

குழு உணர்வுகள் மறைந்து ஒருமைப்பாடு ஓங்கட்டும்! சந்தர்ப்ப வாதங்கள் மறைந்து, சகோதர அன்பு பரவட்டும்

தேவன் தமது சபைக்காக கரிசனையுள்ளவராக இருக்கிறார் பாவிகளுக்காகப் பரதவிக்கிறார். கர்த்தர் தமது சபைக்காக பக்தி வைராக்கியமாக இருக்கிறார். (எபே. 5 :26-27) அப்போஸ்தலரும் ஆதிக் கிறிஸ்தவர்களும் சபைக்காய் தேவ வைராக்கியம் கொண்டிருந்தனர். (2 கொரி 11 : 1-2) நாமும், நமது உலகியல் பற்றை விட்டு விட்டு ஆத்தும மேம்பாட்டை வாஞ்சிப்போமாக! எஸ்ரு, நெகேமியா போல சபைகளின் இழிநிலையைக் கண்டு உருகுவோமாக! சபைக்காக, ஊழியத்திற்காக கரிசனை கொள்வோமாக! இக்காலத்தின் தேவையை - அதில் நமது பங்கை உணருவோமாக! இந்திய கர்த்தருடைய சபைகளின் எழுச்சிக்காக, வளர்ச்சிக்காக பாடுபடுவோமாக! உடன் ஊழியர்களே! நாமும் பவுலோடு சேர்ந்து சபைகளைப் பற்றிய கவலை என்னை நாள் தோறும் நெருக்குகிறது என்று சொல்லுவோமா (2கொரி 11:26)

**E. Z. செல்வநாயகம்**

## ஊழியனுக்கு ஓர் அறிவுரை

முதிர் வயதுள்ளவர்களைக் கடிந்து கொள்ளாமல் அவர்களைத் தகப்பனைப்போலவும், இளம்வயது புருஷரைச் சகோதரர்கள் போலவும், முதிர்வயதுள்ள பெண்களைத் தாய்மாரைப் போலவும், இளம்வயதுள்ள பெண்களை தூய மனதோடு சகோதரிகளைப் போலவும் பாவித்து புத்தி சொல்லு.

உள்ளபடி விதவைகளாயிருக்கிறவர்களைக் கனம் பண்ணு. விதவைகளுக்குப் பிள்ளைகளோ பேரப் பிள்ளைகளோ இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்ப விஷயத்தில் பக்தி காட்டவும். பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யவும். கற்றுக்கொள்ளக்கடவர்கள். இது கடவுளுடைய சந்நிதியில் உகந்தது. I தீமோத்தேயு 5:1-4

விசுவாசியாகிய ஒருத்தியிடம் விதவைகள் இருந்தால், அவர்களுக்கு இவள் உதவி செய்யக் கடவள். சபையின் மேல் அந்த பாரத்தை சுமத்தக்கூடாது. உள்ளபடி விதவைகளானவர்களுக்குச் சபை உதவி செய்ய வேண்டும்.

I தீமோத்தேயு 5:16

# வேத வசனத்தின் படி நீர் கிறிஸ்தவரா?

கிறிஸ்தவன் யார் என்பதை நிர்ணயம் செய்வற்குப் பலர் பல்விதமான அளவு கோல்களைப் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலோர் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் உள்ளவர்கள் எல்லோருமே கிறிஸ்தவர்கள் என்று பொதுவாக நினைக்கின்றனர். இன்னும் சிலர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் என்பர். இன்னும் சிலர் யாரெல்லாம் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்கிறார்களோ அவர்கள் எலலோருமே கிறிஸ்தவர்கள் தான் என்கின்றனர். இன்னும் சில பேர் எல்லாச் சபைகளிலுமே கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்கின்றனர்; மாதாவை வழிபடும் கத்தோலிக்கரும், இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை ஏற்றுக் கொள்ளாத யெகோவாவின் காட்சிகளும் கூட தங்களைக் கிறிஸ்தவர்கள் என்றே கூறிக் கொள்ளுகிறார்கள்.

கிறிஸ்தவன் என்பவன் இப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்று நாம் வேத ஆதாரங்களை மேற்கோள் காட்டி விளக்க முற்பட்டால் பல கேள்விகளையும் கண்டனங்களையும் சந்திக்க நேரிடும். ''இதெல்லாம் குறுகிய மனப்பான்மை, வெறித்தனம், மற்றவர்களைக் குற்றப்படுத்தும் நோய் பிடித்தவர்கள்'' என்று நம்மீது பாய்வர். கிறிஸ்தவ அறத்தில் பற்றுக் கொண்டோர் கூட இந்த விஷயத்தில் நம்முடைய நிலையை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர். இவ்விதமான மனப்போக்கு தேவனுடைய வார்த்தைகளுக்கு நாம் கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுக்காமல் ''எம்மதமும் சம்மதம்'' என்ற ஓர் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறதினால் உண்டாகும் விபரீதம் என்று சொன்னால் மிகையாகாது.

வேத வசனங்களின் அடிப்படையில் கிறிஸ்தவத்தைப் பார்க்க வேண்டும் என்று வற்புறுத்தினால் பலருடைய பகைமையையும், எதிர்ப்பையும் சம்பாதிக்க நேரிடும். எல்லாருடைய கருத்துக்களும் சரிதான் ஏற்றுக் கொள்வோமானால் சர்ச்சையில்லை என்பது உண்மைதான். ஆனால் பரிசுத்த வேதாகமம் ஒரு கிறிஸ்தவன் எப்படி இருக்க வேண்டும், எப்படி ஒருவன் கிறிஸ்தவன் ஆக வேண்டும், எந்தச் சபையில் அங்கம் வகிக்க வேண்டும் என்று சொல்லுகிறது. என்பதையும் பார்க்க வேண்டுமே! ஏனெனில் நம்மில் யார் என்ன நினைத்தாலும், சொன்னாலும் அவைகள் முடிவானவைகள் அல்ல. ஆன்மீக விஷயங்களில் தேவனுடைய வார்த்தைகளே அதிகாரமுடையவைகள் முடிவானவைகள். அப்படி-

யெல்லாம் யார் சொன்னது? அவைகளை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. என்று வாக்குவாதம் செய்வோமானால் நாம் எதையும் நம்முடைய மனம் போனபடி செய்யலாம் அதற்குப் பேச்சே கிடையாது. நாம் சொல்லுகிற காரியங்கள் கர்த்தருக்கு பயந்து, அவருடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்கிறவர்களுக்குத் தான்.

பரிசுத்த வேதாகமத்தில் மூன்று இடங்களில் 'கிறிஸ்தவன்' என்ற சொல் காணப்படுகிறது. அப் 11:26ல் **''முதன் முதலில் அந்தியோகியாவில் சீஷர்களுக்குச் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கலாயிற்று''** என்றும், பின்னர் அப்போஸ்தலன் பவுலை ஏரோது அக்ரிப்பா ராஜா நியாயம் விசாரித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு கூட்டத்தில் ஏரோது அக்ரிப்பா பவுலே பார்த்து **''நான் கிறிஸ்தவனுவதற்கு கொஞ்சம் குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிருய்''** என்று சீறுகிறான். (அப் 26:28) மூன்றாவதாக **''ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால், பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்''** என்கிறார். (1பேது 4:16)

மேலும், பழைய ஏற்பாட்டில் தீர்க்கன் ஏசாயா **''கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்''** என்கிறார். (ஏசாயா 62:2) புதிய ஏற்பாட்டிலும் கூட **''அ வ ர ா லே (இயேசு) யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லே.** (அப் 4:12) என்றும், **''வார்த்தையினுலாவது, கிரியையினுலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே செய்து....'' (கொலோ 3:17)** என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவைகள் எல்லாம் நமக்குக் கூறும் உண்மை என்ன? கிறிஸ்தவன் என்பவன் கிறிஸ்துவைப் போலவும், கிறிஸ்துவை எல்லாவற்றிலும் பின்பற்றுகிறவனுகவும் இருக்க வேண்டும் என்பதாகும். அதே போல பெயர் தரித்துக் கொள்வதில் கூட நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும். அவருடைய பெயருக்குப் பதிலாக மனிதர்களுடைய அல்லது மனிதர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பெயரை முன்னாலோ பின்னாலோ இணைத்துக் கொள்வது, அவரைக் கனவீனப்படுத்துகிற காரியம். பரிசுத்த வேதாகமத்தில் வெறுமனே 'கிறிஸ்தவன்' என்று தான் இருக்கிறதே தவிர நீ அந்தக் கிறிஸ்தவன் இந்தக் கிறிஸ்தவன் என்றோ கிடையாது. இவ்வாறெல்லாம் விளக்க முற்பட்டால், மனிதரால் சூட்டப்பட்ட

பெயரைத் தரித்துக் கொள்ளக் கூடாது என்று எழுதப்பட்டிருக்கிறதா? பெயரில் என்ன ஐயா இருக்கிறது, யோக்கியமாய் நடக்க வேண்டும். அதுதான் முக்கியம். என்றெல்லாம் தங்கள் தவறான போக்கை நியாயப்படுத்தத் துணிவோரே! நீங்கள் உங்கள் வரம்பை மீறி, தேவனுடைய அதிகார எல்லையை ஆக்கிரமிப்புச் செய்கிறீர்கள். கர்த்தருடைய வார்த்தைகளை மீறுவது ஒன்றும் பெரிய காரியமல்ல என்பீர்களானால், பின்னே எதுதான் நமக்குப் பெரிய காரியம் ? சிந்திப்பீர்!

அடுத்து, நாம் கிறிஸ்தவர்களாவது எப்படி என்கிற விஷயத்துக்கு வருவோம். அதற்குரிய வழி முறைகள் என்ன என்பதைப் பற்றி வேதாகமம் மௌனமாயிருக்கவில்லை. ஒருவன் நான் கிறிஸ்தவனாகி விட்டேன் என்று சொல்வதினால் அவன் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. அல்லது நான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்வானானால் அது கூடப் போதாது என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். நமது தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் கூட கிறிஸ்துவை விசுவாசித்தார். அவருடைய மதப் பிரசங்கங்களை வாசித்து, தம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடித்தார். ஆயினும் அவர் தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ளவுமில்லை. அவர் அப்படி சொன்னாலும் நாம் ஏற்றுக் கொள்ள போவதும் இல்லை. இந்த விஷயத்தில் நீங்கள் சொல்வதை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஒருவன் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வானானால் அவனைக் கிறிஸ்தவன் என்று அழைப்பதில் தவறு இல்லை என்று வாதிடுவீர்கள். அதாவது உங்கள் வாதம் என்னவெனில், இயேசுவை நான் இதயத்தில் விசுவாசித்தேன். அவர் என் பாவங்களைப் போக்கி விட்டார். இப்பொழுது நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று சொன்னால் நாம் நம்ப வேண்டியது தானே. அதை ஏன் சந்தேகிக்க வேண்டும்?

மாதாவை வழிபடும் கத்தோலிக்கரும், கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஏற்காத யெகோவா சாட்சிகளும் கூட தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். கீழே சொல்லப்படுபவைகள் கர்த்தருக்குப் பயந்து அவருடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்கிறவர்களுக்குத்தான் உங்கள் அதிகார எல்லையை மீறி, கர்த்தருடைய அதிகாரத்தில் தலையிடுகிறீர்கள்.

நமது தேசப்பிதா மகாத்மாகாந்தி கூடத்தான் கிறிஸ்துவை நம்பினார். ஆனால் அவர் தன்னைக் கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்ளவுமில்லை. நாமும் அவரைக் கிறிஸ்தவர்கள் என்று ஏற்றுக் கொள்வதுமில்லை.

மேற்சொன்னவாறு வாதம் செய்கிற ஒவ்வொருவரையும் நான் கேட்கிற ஒரு கேள்வி ''இவைகளையெல்லாம் எந்த வேத வசனத்தின் ஆதாரத்தை வைத்துச் சொல்லுகிறீர்கள்? இவ்விதமான போதனைகள் பரவலாகப் போதிக்கப் படுவதை நானும் அறிவேன்; ஆனால் இயேசு கிறிஸ்துவோ, பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்களோ அவ்விதமாய்ப் போதித்தார்கள் என்பதற்கு வேத ஆதாரம் கிடையாதே. ஒருவன் கிறிஸ்தவன் ஆவதற்கு முதலில் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்பது சரிதான். ஆனால் இரட்சிக்கப் படுவதற்கும், கிறிஸ்தவன் ஆவதற்கும் அதோடு வேறு சில காரியங்களையும் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறதே!

கிறிஸ்து **''என்னை ஆண்டவரே, ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?** என்றும் (லூக் 6:46) **''பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை''** என்றும் (மத் 7:21) சொல்லியிருக்கிறார். மேலும் எபிரேய நிருப ஆசிரியர், **''அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாகி.** . . . . (எபி 5:8,9) என்று எழுதுகிறார். மேற்சொன்ன வசனங்களைத் தொகுத்துப் பார்க்கும் போது, கர்த்தரை விசுவாசித்தால் மட்டும் போதாது; அவருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும் என்று தெரிகிறதல்லவா? அதற்கு நீங்கள்'' நாங்கள் விசுவாசிகளான போது இரட்சிக்கப்பட்டோம்; இரட்சிக்கப்பட்டதினாலே கீழ்ப்படிகிறோம் என்று சொல்லுவீர்கள். அப்படியானால் இன்னுமொரு கேள்வி அப்படி வேதாகமத்தில் எங்கே கூறியிருக்கிறது? இயேசு கிறிஸ்து தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலருக்குச் சொன்னதைக் கேளுங்கள்'' . . . . . . **நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப்பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.** (மாற்கு 16:15,16) இப்பொழுது சொல்லுங்கள்: ஒருவன் இரட்சிக்கப்படாமல் கிறிஸ்தவனாக முடியுமா? முடியாது என்றால் பின் என்ன செய்ய வேண்டும்? ஒருவன் இரட்சிக்கப்பட்டுக் கிறிஸ்தவனாவதற்கு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும். என்கிறதல்லவா?

ஒருவன் விசுவாசியா விட்டால் என்ன ஆகும்? உலகத்தில் உள்ள கோடானு கோடி மக்களைப் போன்று இவனும் இரட்சிப்பை இழந்து நிற்பான். ஒருவன் விசுவாசித்தால் என்ன ஆகும்? அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிவான் இதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். உதாரணமாக சுவிசேஷகன் பிலிப்பு எத்தியோப்பியா மந்திரிக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்தான் அவர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்தான். அதற்குப் பிலிப்பு சொன்ன பதில் என்ன? "**நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை** என்பதாகும். அதைக் கேட்ட எத்தியோப்பிய மந்திரி அடுத்துக் கூறியது என்ன? **இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன்**" என்பதாகும். தொடர்ந்து நடைபெற்றதென்ன? பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஆகவே இரட்சிக்கப்படுவதற்கு முதலாவது ஒருவன் இயேசுகிறிஸ்துவை முழு இருதயத்துடன் விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும். பின்னர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப் 8:36-38)

மீண்டும் அப் 2:38 க்குத் திருப்புவோம். பெந்தேகோஸ்தே நாளில் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் திரளான மக்களுக்கு முதன் முறையாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். விசுவாசித்தவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படுவதற்கு இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். பேதுரு அவர்களுக்கு "**நீங்கள் மனம் திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்** என்று பதில் சொன்னார். அந்த அறிவுரையை ஏற்றுக் கொண்டு அன்றைய தினம் சுமார் மூவாயிரம், பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்று கூறுவதை வாசிக்கிறோம். "**இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்** என்று வேறொரு இடத்தில் வாசிக்கிறோம். (அப் 2:41, 47) இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்ன? கர்த்தரை விசுவாசித்தவர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனம் திரும்பினார்கள் இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கையிட்டார்கள்; இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் பெற்றார்கள், சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று சந்தேகமில்லாமல் ஒத்துக் கொள்ளலாம் அல்லவா? அதே போல இரட்சிக்கப்படுவதற்கும், அங்கத்தினர்கள் ஆவதற்கும், கிறிஸ்தவர்கள் ஆவதற்கும் விரும்புகிற அனைவருமே செய்வது அவசியம் என்பதை ஏற்றுக்

கொள்கிறீர்களா? இதன் அடிப்படையில் பார்க்கும் போது மேற்படி முறையின்படி செய்தவர்களே இரட்சிக்கப்பட்டவர்கள், அங்கத்தினர்கள், கிறிஸ்தவர்கள்; இப்படியெல்லாம் செய்யாதவர்கள் இரட்சிக்கப்படவில்லை. இரட்சிக்கப்பட்டு விட்டதாக ஒரு போலி திருப்தியோடு உலா வருகிறார்கள். வேதாகமத்தின் படி செய்யாமல், தங்கள் இஷ்டம் போல் செய்து கொண்டு, நான் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்வது முறை கேடானது. என்பதை உணர்கிறீர்களா? நீங்கள் புதிய ஏற்பாட்டைத் திறந்து அப்போஸ்தலர்கள் நடபடிக்கை நூலை வாசித்துப் பார்த்தீர்களானால் இரட்சிக்கப்பட்ட அனைவருமே மேற்சொன்ன முறையையே கைக்கொண்டிருக்கிறார்கள். மேலும் ரோமருக்கு எழுதின நிருபத்திலும் (ரோமர் 6:3,4) கிறிஸ்தவர்கள் ஆவதற்கு தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதாவது ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்றும் அவருடைய சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள் என்று கொரிந்தியர் நிருபத்திலும் வாசிக்கிறோம் (கொரி 12:13) இன்றைக்கும் அதே சட்டம் தான். யாரெல்லாம் அவர்கள் செய்ததைப் போல செய்கிறார்களோ அவர்களே இரட்சிக்கப்படுவார்கள். அவர்களே கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் சேர்க்கப்படுவார்கள். இதை விடுத்து, ஒருவன் இரட்சிக்கபட்டவன் என்று சொல்வதும் அவனுக்கு கிறிஸ்தவன் என்று சான்றிதழ் வழங்குவதும் பாவமாகும். கர்த்தருடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணுகிற அவர்களைக் கடைசி நாளில் அவருடைய வசனமே நியாயம் தீர்க்கும் (யோவான் 12:48)

அருமை நண்பனே, சகோதரியே!

நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். தங்களுடைய அறியாமையினாலும், சுய நலத்திற்காகவும் வேதாகமத்தில் காணப்படாத முறைகளை உங்கள் மீது தந்திரமாய்த் திணித்து, நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள், நீங்கள் இப்பொழுது கிறிஸ்தவர்களாகி விட்டீர்கள் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொண்டு மௌனமாக இருக்காதீர்கள். வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள். இது நித்தியம் சம்பந்தப்பட்ட விஷயம். உங்களை மோசம் போக்குகிறவர்கள் பரலோகம் கிடைக்காமற்போனால் போகட்டும். இந்த உலகத்திலாவது சுக போகமாக வாழ்வு கிட்டினால் போதும் என்று துணிந்து உங்களைத் தவறான பாதையில் நடத்துகிறார்கள். உங்கள் ஆத்துமாவுக்கு நீங்கள் தான் பொறுப்பு. நியாயத் தீர்ப்பு நாளில் உங்களைத் தவறான பாதையில் நடத்தினவர்கள் உங்களைக் காப்பாற்ற மாட்டார்கள் முடியவும் முடியாது.

மேலே சொல்லப்பட்ட அனைத்தையும் கவனித்து விஷயங்களைத் தொகுத்துப் பார்ப்பீர்களானால் இரட்சிக்கப்படுவதற்கு

ஒருவன் முதலாவது கீழ்ப்படிய வேண்டும், கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய சரீரமாகிய சபைக்குள்ளும் உட்பிரவேசிக்கவும், இரட்சிக்கப்பட்ட நிலையில் இறுதிவரை நிலைத்திருக்கவும், இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி நடக்க வேண்டும். கிறிஸ்துவைப் பின்பற்றி நடப்பதும், அவருக்கு உண்மையாக இருப்பதும் எளிதான காரியமல்ல என்பது உண்மை. எவர் வேண்டுமானாலும் கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. நமக்கு விருப்பமான சட்ட திட்டங்களை உருவாக்கிக் கொள்ள முடியாது. கிறிஸ்து நம்முடைய வேலைக்காரரர் அல்ல அவர் நமது இரட்சகர் ஆகவே அவருடைய உபதேசச் சட்டங்களைக் கூட்டாமல் குறைக்காமல் பின்பற்ற வேண்டும். அப்பொழுது அவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய கிறிஸ்தவனாக இருக்க முடியும்.

என் நண்பனே! கர்த்தருடைய அளவு கோளின்படி நீர் கிறிஸ்தவனா? அப்படியில்லாதிருந்தால் தயவு செய்து இப்பொழுதாவது சிந்தித்துச் செயல் படுங்கள். காலம் சமீபத்து விட்டது.

**J. C. சோட்**

---

## பயனுள்ள பேச்சு

நாம் எல்லாரும் கிறிஸ்துவின் அவயங்களாய் இருப்பதால், நீங்கள் பொய்யைக் களைந்து ஒருவரோடொருவர் உண்மையைப் பேசுங்கள். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிப்பதற்குமுன் உங்கள் சினம் தணியக் கடவது. பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல் குறைவுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாய் தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளால் நல்ல வேலை செய்து உழைக்கக் கடவன். தீய வார்த்தைகள் ஒன்றும் உங்கள் வாயிலிருந்து வரலாகாது. அவசியத்திற்கேற்றபடி பக்திவிருத்திக் கேதுவான நல்ல வார்த்தை உண்டானால் கேட்கிறவர்களுக்குப் பயன்படும்படி அதையே பேசுங்கள்

எபேசியர் 4:25-29

# சபையைப் பற்றிய கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது

மனிதர் யாவரும் விவரிக்க முடியாத ஏதோ ஒரு விதமான கவலையில் மூழ்கியிருக்கின்றனர். அநேகர் உணவு, உடை, இருப்பிடம் போன்ற வாழ்வியல் தேவைகளுக்காகவே கவலைப் பட்டு தங்கள் ஆத்தும இரட்சிப்பு, நித்தியம் ஆகியவைகளைப் பற்றி சிறிதளவும் அக்கரையின்றி இருக்கிறார்கள். இவைகள் யாவையும் நிறையப் பெற்றவர்கள் உலகியலில் மூழ்கி ஆத்தும பற்றிய அக்கரையில்லாமல் இருக்கிறார்கள். சரீரத் தேவைகளுக்காகக் கவலைப் பட்டு அலைவதை விட்டு விட்டு, முதலாவது தேவனுடைய இராஜ்ஜியமாகிய கிறிஸ்துவின் சபையையும் அவருடைய நீதியையும் தேடும்படி கிறிஸ்து கற்பித்தார். (மத் 6: 25-34)

உலகத்தாரை விட எந்தவிதத்திலும் குறைவு படாமல் இன்றைய கிறிஸ்தவர்களும் உலகியலில் மூழ்கி, தேவன் தங்களைப் படைத்து, அழைத்து, இரட்சித்த நோக்கத்தை மறந்து நிற்கின்றனர். தங்கள் சரீர நலன்களை எப்படியோ அடைய முயற்சிப்பதும், அடைந்த பிறகு அவற்றைப் பாதுகாப்பதுமே பெரும்பான்மையான கிறிஸ்தவர்களுக்கு ஒரு போராட்டமாக இருக்கிறது. சொல்லப் போனால் உலகியல் கிறிஸ்தவர்களை அடிமை கொண்டு விட்டது. இதன் தாக்கத்தையும் விளைவுகளையும் புரிந்து கொள்ளாமல் நிர்விசாரமாக இருந்து வருகிறோம்.

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர் மற்றும் அவர்களுடைய சமய சமுதாயத் தலைவர்கள் ஆகியோருடைய நடவடிக்கைகளின் வெளிச்சத்தில் இன்றைய கிறிஸ்தவர்களுடைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்து உணர்வடைவோமாக. (1 கொரி 10: 11) அவர்கள் தேவனை மறந்து, அவருடைய கற்பனைகளைப் புறக்கணித்துப், தங்களைச் சுற்றிலுமிருந்த விக்கிரக ஆராதனைக்காரர்களைப் போல மாற விரும்பி அவர்களோடு கலந்து உறவாடியதின் மூலமாக தேவனுக்கு வருத்தத்தை உண்டாக்கினார்கள்.

இதோ அவர்களுடைய சீர்கேட்டைப் பாருங்கள் :

**சமய வாழ்க்கையில்** ஓய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினர். அருவருப்பானதைப் பலியிட்டுக் கொண்டு வந்தனர். காணிக்கை விஷயத்தில் தேவனை வஞ்சித்தனர். சிலை வழிபாட்டுக்குத் திரும்பினர். மல் 1: 8; 3: 8; ஓசி. 4:13

**சமுதாய வாழ்க்கையில் :** ஏழைகளை ஒடுக்கி அநியாயம் செய்தனர். நிர்விசாரம், சிற்றின்பம், பெருந்தீனி, சோம்பல், உலக

உல்லாசம், லஞ்சம், கர்த்தருடைய வீட்டைக் குறித்த கவலையில்லாமை ஆகிய பாவங்களில் மூழ்கிக் கிடந்தனர். ஆமோ 6:1-6;5:11-19; ஆகாய் 1:4,9)

**பாலியல் வாழ்க்கையில் :** ஒழுக்கக் கேடு, தம்பதி துரோகம், அந்நிய, பலதாரத் திருமணம் போன்றவை மலிந்து கிடந்தன. (ஓசி 4:13,14; மல் 2:11-15).

**பொருளியல் வாழ்க்கையில் :** கள்ளத் தராசு, கலப்படம் பதுக்கல், கூலிக்காரர்களின் கூலியைப் பிடித்து வைப்பது போன்ற தவறுகளைத் கூசாமல் செய்தனர். (ஆமோஸ் 8: 4-6) தேவஜனம் இவ்விதமாய் நடந்து தேவனை துக்கப்படுத்தி, தங்கள் சிறப்பான உறவு நிலையை இழந்து தண்டனை அடைந்தனர். இஸ்ரவேலரின் சமுதாய சமயத் தலைவர்கள் (இராஜாக்கள், ஆசாரியர், தீர்க்கதரிசிகள்) உலகியலில் மூழ்கியதால் ஏற்பட்ட இழிநிலையைப் பார்ப்போம்.

1. வேதத்தைப் போதிக்க வேண்டியவர்கள் அதை மறந்தனர். (ஓசி 4:6)
2. மக்களைச் சுரண்டி மோசம் போக்கினர். (மீகா 3:5-7)
3. தீர்க்கதரிசிகள் குருடர்களாகவும், குலைக்க மாட்டாத ஊமையான நாய்களாகவும், சுய நலமிகளாகவும், சுகபோகிகளாகவும் இருந்தனர். (ஏசா 56:10-12)
4. மந்தையை வழி நடத்தாமல் சிதறடித்து தொழுவத்தை மறந்தார்கள். (எரே 23:2;50:6)
5. மந்தையை மேய்ப்பதற்கு மாறாக பீறிப்போட்டார்கள். (எசே 34:2-3)
6. கூலிக்கு மாரடிக்கும் போலி மேய்ப்பர்கள். (யோவான் 10:12)
7. மோசடி வேலையில் கூட்டுறவு. (எசே 22:26-29)
8. தீமை செய்ய மக்களை ஏவி விட்டனர். (மத் 27:20,41)

தேவனுடைய ஊழியர்கள் தங்கள் தெய்வீகப் பணியை மறந்து, நடந்து கொண்ட விதத்தைப் பாருங்கள்! எத்துணை வேதனை! எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகம்! எவ்வளவு மாயமாலம்! எத்துணை பெரிய அலட்சியம்! அப்பப்பா! ஆசாரியன், தீர்க்கதரிசி என்ற போர்வையில் எத்தனை உல்லாசம்! போலித்தனம்! கேட்பார் இல்லை என்ற மமதை!

இவ்விதமாய் தமக்கு துரோகம் இழைத்த தமது ஜனமாகிய இஸ்ரவேலரையும், அவர் தம் சமய சமுதாயத் தலைவர்களையும்

தேவன் தண்டித்தார். அவர்களுடைய விவசாய, பொருளாதார முயற்சிகளை நாசப்படுத்தினார். (ஆகாய் 1:6-11)

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் நமக்குத்தரும் படிப்பனை என்ன? இன்றைய இந்தியக் கிறிஸ்தவ சூழல் இதிலிருந்து எந்த வகையில் வேறுபட்டுள்ளது? சிந்தித்துச் சீர்தூக்கிப்பாருங்கள், சகோதரரே!

உலகியல் ஈடுபாட்டால் இன்றையக் கிறிஸ்தவம் சாரமற்ற உப்பாக மாறிவிட்டது. எருசலேம் சபையார் ஜெபத்தில், ஒருமைப்பாட்டில், சமுதாய ஒற்றுமையில், சகோதரத்துவத்தில் ஊழியம் செய்வதில் இடைவிடாமல் அக்கரையோடு ஈடுபட்டனர். முதல் நூற்றாண்டு சுவிசேஷப் பணியாளர்கள் **தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணினார்கள்.** (அப் 5:42) கடுமையான எதிர்ப்பிலும், உபத்திரவத்திலும் தளராது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். **''அந்த மனுஷனுடைய இரத்தப் பழியை எங்கள் மேல் சுமத்த வேண்டும் என்றிருக்கிறார்களோ''** என்ற அச்சமுடன் கேட்டார்கள். (அப் 5:28) **இதோ உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்து விட்டார்கள்** என்று எதிரிகள் பயப்படுகிற அளவுக்கு அப்போஸ்தலர்களுடைய பணி தீவிரமாக இருந்தது. (அப் 17:6)

உலகியல் தாக்கம் இன்றைய கிறிஸ்தவர்களை எந்த அளவு பாதித்துள்ளது என்பதைக் கவனிப்போம். அநேகர் தாமதமாக ஆராதனைக்கு வந்து சீக்கிரமாய் வெளியேற விரும்புகின்றனர். சற்றே கூடுதல் நேரமாகிவிட்டால் கடிகாரத்தைப் பார்க்கின்றனர். முகம் சுளிக்கின்றனர். கொட்டாவி விடுகின்றனர். இடுப்பை நெளிக்கின்றனர். காரணம் என்ன? சிலர் ஆன்மீகக் காரியங்களை முக்கியமானதாகக் கருதுவதே இல்லை. காலை 9:30 மணிக்கு பேருந்தைப் பிடிக்க விரும்பும் எத்தனை பேர் 9:45 அல்லது 10:00 மணிக்குப் பேருந்து நிலையம் செல்வர்? அத்தகைய மக்களை சமுதாயம் எப்படி மதிப்பிடும்? இப்படிப்பட்ட காரியங்களிலெல்லாம் அக்கறையுடன் நேரத்தைக் கடைப்பிடிப்பவர்கள். கர்த்தருடைய ஆராதனைக்கு வரும்போது, பிந்தி வருவது எதைக் காட்டுகிறது? எத்தனை பெரிய அலட்சியம்! கொரிந்து சபையாரின் சபை கூடுதல் தீமைக்கு ஏதுவாக இருந்தது போல இன்று பல சபைகளின் கூடி வருதல் தீமைக்கு ஏதுவாக இருக்கிறது. (1 கொரி 11:17. 20-22; 15:40)

கிறிஸ்தவர்கள் தங்கள் நேரத்தையும், பொருளையும் செலவிடும் முறை உலகத்தவர் பாணியிலேயே உள்ளது போதுமான அளவு கொடுக்க முடியாமைக்கு நமது பொருளாதார சூழ்நிலைகளைக்

காரணம் காட்டுகிறோம். ஆனால் திருமணம் உள்ளிட்ட பிற சமுதாய சம்பிரதாயங்களைச் செய்வதில் ஏழ்மை குறுக்கிடுவ-தில்லை. திட்டமிட்டுச் சேமித்து அல்லது கடன்பட்டாவது காரி-யத்தை முடித்து விடுகிறோம். அதே சமயத்தில் கர்த்தருக்குக் கொடுக்கும்போது மட்டும் ஏனோ நம்முடைய கரங்கள் குறுகிப்-போகின்றன. மக்கதோனியா சபையாரைப்பற்றி வேதம் கொடுக்கிற சாட்சி என்ன? **''மிகுந்த உபத்திரவத்தில், கொடிய தரித்-திரத்தில் உதாரத்துவமாயும், திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள்** என்கிறது. (2 கொரி 8:1-4)

சிலர், அஞ்ஞானிகள் 'கெண்டையைப் போட்டு விராலைப் பிடிக்கும்' நோக்கத்தோடு நன்கொடை கொடுப்பதைப் போல ஆண்டவருக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். சில்லறைக் காசு-களை காணிக்கையாகக் கொடுத்துவிட்டு பெரும் பெரும் ஆசீர்-வாதங்களைக் கர்த்தரிடம் எதிர்பார்க்கின்றனர். கேட்டால், விதவை போட்ட இரண்டு பைசா காணிக்கையை ஆண்டவர் சிலாகித்துப் பேசினதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? என்று நம்மை மடக்குகிறார்கள். இன்னும் சிலர் காணிக்கை கொடுக்கும் நேரத்தில் தான் சில்லறையைத் தேடி எடுத்து மனைவி, பிள்ளைகளுக்கு கிரிக்கெட் பந்து வீசுவது போல் வீசி எறிவர். காணிக்-கை கொடுத்தலைப் பற்றி அவர்களுடைய மனநிலை எவ்வளவு அலங்கோலமாக இருக்கிறது என்று பாருங்கள்! மக்கதோனியரின் கொடுத்தலைப் பற்றிச் சொல்லும் போது **''தங்களைத் தாமே கர்த்தருக்கும் பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்தார் கள்''** என்றும் (2கொரி 8:5) கர்த்தர் நம்முடையதை மட்டுமல்ல; நம்மையும் ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றும் விரும்பு கிறாரே (ரோமர் 12:1-2) இவ்விதச் சீர்கேடுகளை அகற்றி நமது பக்தி நெறிகளைச் சீர்படுத்துவது எப்போது? கிறிஸ்தவர்களின் சமுதாய வாழ்க்கையில் மூட நம்பிக்கை ஜாதி வேற்றுமை பெரு-மளவில் மண்டிக் கிடக்கின்றன. கொரிந்து பட்டணத்துக் கிறிஸ்-தவர்கள் பேயின் பாத்திரத்திலும், பங்கு பெற்றது போல, கலாத்-திய சபையார் நியாயப் பிரமாணத்துக்குத் திரும்பி கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தது போன்ற நிலையில் இன்றைய கிறிஸ்தவர்களும் இருப்பது வேதனை! (1கொரி 10:21; கலா 4:9-11,19; 5:4,8-9) கிறிஸ்தவர்கள் ரேகை பார்ப்பது, நல்ல நாள், நல்ல நேரம் பார்ப்பது ஜாதிப் பெயர்களைப் பெய-ருடன் சேர்த்துக் கொள்வது ஜோதிடம் பார்ப்பது இன்றும் நடை முறையில் உள்ள கேலிக்கூத்துகள். அஞ்ஞானிகளைப் போலவே சிலர் எசகடம் செய்து வைத்தல், முடி எடுத்தல், பொருத்தனை செய்து கொள்ளுதல் காது குத்து, சீர் செய்தல் போன்றவைகளை-யும் செய்து கிறிஸ்தவ அறத்தைக் கொச்சைப்படுத்துகிறார்கள்.

கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள் என்று வேதம் எச்சரிக்கிறதைப் பற்றி யாரும் கவலைப்பட்ட மாதிரி தெரியவில்லை. எபே 5:11; ரோமர் 13:12. லவோதிக்கேயாவில் உள்ள சபைக்கு எழுதின வாசகங்களே இந்தியச் சபைகளுக்கும் பொருந்தும் என்று சொன்னால் மிகையாகாது வெளி 3 : 15-18 வரை உள்ள வசனங்களை ஜெபத்தோடு வாசித்துச் சிந்திப்போம்.

திருச்சபையே, தேவன் தமது நித்திய திட்டத்தில் உனக்குக் கொடுத்துள்ள இடத்தை நீ உணர்ந்திருக்கிறாயா? (எபே 3 : 10, 21) சத்தியத்துக்குத் தாணும் ஆதாரமுமாக இருந்து தேவ சித்தத்தை நிறைவேற்றுகிறாயா? (1 தீமோ 3 : 15) பாவ உலகத்தை இரட்சிக்கும் செய்தியை உன்னிடம் கொடுத்து உன்னை மட்டும் தேவன் நம்பியிருக்கிறாரே! நீயோ, ஊழியன் தான் செய்ய வேண்டும். என்னுடைய கடமை ஞாயிறு காலையில் ஒரு மணி நேரம் ஆலயத்தில் அமர்வதுடன் முடிந்து விட்டது என்று நினைக்கிறாயே! சிதறிப் போன எருசலேம் சபையார் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் என்று வாசிக்கிறோமே. (அப் 8 : 1-4) அவர்கள் ஊழியர்கள் அல்ல விசுவாசிகள் தான். முதல் நூற்றாண்டு சபை ஊழியம் செய்ததோடு மட்டும் அல்ல ஊழியரை பொருளாலும் தாங்கினார்கள். (பிலி 4 : 15,16) ஊழியத்தையும் ஊழியரையும் தாங்க வேண்டிய திருச்சபையே! இது பற்றிய சிந்தையே உனக்கு இல்லாமலிருப்பது எவ்வளவு பொறுப்பற்ற தன்மை! (1கொரி 9 : 11, 14)

உனது ஊழியர்களைக் காலமெல்லாம் அந்நியர்களைச் சார்ந்திருக்கச் செய்து, அவர்களை எடுப்பார் கைப்பிள்ளையாக வைத்திருக்கிறாயே! வேலை பார்ப்பது உன்னிடம்; சோற்றுக்கு அடுத்தவனிடம் கையேந்த வைக்கிறாயே! உனக்கு வெட்கம் இல்லையா? நீ விமர்சிக்கும் ஆவிக் கூட்டத்தார் அவர்கள் ஊழியர்களை எவ்வாறு தாங்குகிறார்கள் என்பதைக் கவனித்துப்-பார்! போலி மார்க்கத்தாரே, அப்படிச் செய்வார்களானால், அசல் நாங்கள் தான் என்று மார்தட்டும் நீ எவ்வளவு அதிகமாய்ச் செய்ய வேண்டும்? (மத் 5 : 20)

தொலைக்காட்சியும், உலகியல் பத்திரிகைகளும் உன்னை ஆக்கிரமிக்க இடமளித்திருக்கிறாயே! சிலர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண்பதற்காக ஆராதனை வேதவகுப்பு, விசேஷக் கூட்டங்கள் ஆகியவைகளை உதாசீனம் செய்வது எவ்வளவு வேதனை! கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் மனுஷனுக்கும் தேவனுக்கும் சத்துருவாகிய சாத்தானுக்கு முன் உரிமையா? அநேக

பட்டணத்துச் சபைகளில் மாலை ஆராதனைக் கூட்டங்கள் சபை நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி காண்பதற்காக ரத்து செய்யப்பட்டு விட்டன. என்ன பரிதாபம்!

பன்றிகளின் மேல் பாசம் வைத்து இயேசுவை வெளி-யேற்றின கெர்கசேனர் நாட்டு மக்களுக்கும் இப்படிப்பட்டவர்-களுக்கும் என்ன வித்தியாசம்? (மத் 8 : 28-34) பேயை விரும்பி, சத்தியத்தைக் கேட்கும் வாய்ப்பை நிராகரித்த மனுஷருக்கும், இப்படிப்பட்டவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

(அப் 16:17-21,39)

இந்தியக் கர்த்தருடைய சபையே, விழித்தெழு, சீர்தூக்கிப் பார், எழும்பிப் பிரகாசி. உன் பணியைச் செய், உன் சிறப்பு நிலையைக் காத்துக் கொள்.

P. பால்ராஜ்

## இதயத்து எண்ணங்கள்

நல்ல மரம் கெட்ட கனி கொடாது. கெட்ட மரம் நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதினதன் கனிகளால் அறியப்படும். முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை. நெருஞ்சிச் செடியில் திராட்சைப்பழங்களை அறுப்பாரும் இல்லை. நல்ல இதயமாகிய பொக்கிஷத்திலிருந்து நல்ல மனிதன் நல்லதை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனிதன் பொல்லாத இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான். இருதயத்-தின் நிறைவிலிருந்து வாய் பேசும்.

லூக்கா 6:43-45

# கிறிஸ்தவன் என்றால் யார்?

இன்று பலர் தங்களை 'கிறிஸ்தவன்' எனக் கூறிக் கொள்ளுகின்றனர். என்றாலும், உண்மையிலேயே "யார் கிறிஸ்தவன்?" என்ற கேள்விக்கு விடை காண, முதலில், "யார் கிறிஸ்தவன் அல்ல?" என்ற வினாவுக்கு விடை காண்போம். ஒரு ஆங்கில பெயரையோ அல்லது வேதாகமத்தில் காணப்படும் பெயர்களில் ஒன்றையோ தரித்துக் கொண்டதால் மட்டும் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ கிறிஸ்தவனாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அழகிய தங்கச் சங்கிலியில் அலங்காரமாக கோர்க்கப்பட்ட சிலுவையை கழுத்தில் அணிவோரெல்லாம் கிறிஸ்தவர் ஆகிவிடமாட்டார்கள். கிறிஸ்து அல்லது மரியாள் அல்லது 'புனிதர்' பலரின் உருவப்படங்களை வீடு முழுவதும் மாட்டி வைத்து அவற்றிற்கு ஊதுவர்த்தி, மெழுகுவர்த்தி கொளுத்தி 'பூஜை' செய்து, ஆண்டில் ஒன்று, இரண்டு 'திருவிழா' நடத்தும் 'கோவில்'களுக்குச் சென்று சப்பர, வாண வேடிக்கைகளைக் கண்டு வருவோரையும் கிறிஸ்தவர்கள் என சிலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அது போக வெள்ளையர்கள் அல்லது மேலை நாட்டவர் எல்லோருமே கிறிஸ்தவர்கள் என்ற மற்றுமோர் தவறான கருத்தும் நம் நாட்டில் பலரிடையே காணப்படுகிறது. என்றாலும், உண்மை இவை யாவற்றுக்கும் புறம்பானதாயிருக்கிறது. தங்களை கிறிஸ்தவன் என அழைக்கும் எல்லோருமே கிறிஸ்தவர் அல்ல. அப்படியானால் யார் தான் கிறிஸ்தவன்? இதற்குப் பதில் வேதாகமத்தில் காண முடிகிறது. வேதாகமம் கூறுவது என்ன?

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனே கிறிஸ்தவன் என்று வேதாகமத்தின் வாயிலாக அறிகிறோம். "**ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்**" (லூக் 9:23) என கிறிஸ்து கூறியிருக்கிறார். ஆகவே, கிறிஸ்தவன் ஆக விரும்புகிறவன் கிறிஸ்துவைப் பின்பற்ற விருப்பமுடையவனாக இருக்க வேண்டும். அவ்வித விருப்பமற்றவனை கட்டாயப்படுத்தி கிறிஸ்தவனாக்க முடியாது. தன்னைத்தானே வெறுத்து, கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணித்து, தன்னுடைய விருப்பத்தின் பேரிலேயே ஒருவன் கிறிஸ்தவன் ஆகிறான். தன்னுடைய சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற சவாலை ஏற்றுக் கொள்கிறவனே கிறிஸ்தவனாக முடிகிறது. பாவிகளுக்காக, சிலுவையின் பாடுகளையும் மரணத்தையும் கிறிஸ்து ஏற்றுக் கொண்டபடியால், சிலுவை துயரம், தியாகம் இவற்றின் சின்னமாயிற்று.

இவ்வுலகில் கிறிஸ்து வாழ்ந்ததைப் போன்ற ஒரு பரிசுத்தமான வாழ்க்கை ஒவ்வொரு கிறிஸ்தவனிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. (1 பேதுரு 2 : 21). அப்படியானால் கிறிஸ்தவனாக மாற நான் செய்ய வேண்டியதென்ன என்ற கேள்வி உங்கள் உள்ளத்தில் எழுகிறதல்லவா? கீழ்க்கண்ட வழிகள் ஒருவனை கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுவோனாக மாற்றுகிறது என வேதாகமம் கூறுகிறது. முதலில், கிறிஸ்து யார் என்றும், மனிதனை பாவத்தினின்று இரட்சிக்க அவர் செய்ததென்ன என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். அடுத்து, கிறிஸ்துவை தேவனின் குமாரன் என்றும், அவரே மனிதனை இரட்சிக்க வல்லவர் என்றும் முழு மனதோடு விசுவாசிக்க வேண்டும். பின்னர், நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்படவேண்டும், அதாவது நமது தவறான வாழ்க்கை முறையை முற்றிலுமாக மாற்றி சரியான பாதையில் செல்ல முடிவெடுக்க வேண்டும். அதன் பின்னர், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவற்றைக் குறிக்கும் வண்ணமாக தண்ணீரில் முழுகி, நமது பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். (அப். 2 : 37,38 & 8 : 35 - 39). மேற்கண்ட விதிகள் எதுவும் குழந்தைகளைக் கட்டுப்படுத்தாது. ஏனெனில், பாவமற்றவர்களாக இருப்பதால் குழந்தைகளுக்கு பாவமன்னிப்பு தேவையற்றது. தேவனின் பார்வையில் குழந்தைகள் பரிசுத்தமானவர்கள். பரலோக இராஜ்ஜியம் இப்படிப்பட்டவர்களுடையதாயிருக்கிறது என குழந்தைகளைப் பற்றி பேசுகையில் இயேசு போதித்தார். (மத். 18:3 & 19:14). பாவம் செய்யக் கூடாத குழந்தைகளுக்காக இயேசு மரிக்கவில்லை. பாவிகளுக்காகவே அவர் சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார். இப்படிப்பட்டவர்களே கிறிஸ்துவை பின்பற்றுவோராக மாறி, இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவியத்தை அடைய வேண்டியவராயிருக்கின்றனர். கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற தங்களை ஒப்புக் கொடுப்பவர்கள் (ரோமர் 6 : 3,4; கலா. 3 : 27), கிறிஸ்துவைப் பின்பற்றுவோராக மாறுகின்றனர்; எனவே அவர்கள் கிறிஸ்தவர்கள், **கிறிஸ்துவின் சபையில்** உறுப்பினர்கள் — அதாவது, தன்னால் இரட்சிக்கப்பட்டவர்களை கிறிஸ்து சேர்த்து வரும் ஆவிக்குரிய சரீரத்தின் அங்கத்தினர்கள். (அப். 2:47; 1 கொரி. 12:13). 2 கொரிந்தியர் 5 : 17ம் வசனத்தின் படி, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நபர் கிறிஸ்துவில் புது சிருஷ்டியாக மாறி அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டியவராகிறார். (1 பேதுரு 2:21). நற்செய்திக்குக் கீழ்படிவதின் மூலம் ஆவியில் புதிய ஜீவனை அடைய முடிகிறது. (யோவான் 3:3,5; 1 கொரி. 15:1-4).

எனவே, கிறிஸ்தவன் ஒரு மாறுபட்ட மனிதனாக இருக்கிறான். தன்னுடைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டவன்

(ரோமர் 12 : 2). உலகத்திற்கடுத்த காரியங்களில் ஈடுபாடு கொள்ளாது பரலோகத்திற்கடுத்த காரியங்களிலேயே அவன் மனது நாட்டங்கொள்கிறது. (கொலோ 3 : 1,2)

ஒரு மனிதன் உண்மையான கிறிஸ்தவனாக மாறும் போது, உலகக்காரியங்களின் பால் அவன் கண்ணோட்டத்தையே மாற்றிக் கொள்ளுகிறான்; அவனுடைய வாழ்க்கை முறையே மாறுகிறது; முன்பு அவன் முக்கியத்துவம் தந்த காரியங்கள் எல்லாம் மாறுகின்றன. (மத் 6 : 33) அப்போஸ்தலர் பவுல் கூறுவது போல, **''எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.''** (பிலிப் 3 : 7, 8). இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்து செயல்பட்டது போல ஒரு கிறிஸ்தவனும் வாழ முயற்சிக்கிறான். எனவே தான் கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன் என அழைக்கப்படுகிறான். கிறிஸ்தவன் முன்மாதிரியான ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை வாழ வேண்டியவனாக இருக்கிறான். மாறாக, மோசமான நடவடிக்கைகள், கெட்டபேச்சுகள், மது அருந்துவது, சண்டைபிடிப்பது இத்தியாதி கெட்ட குணங்கள் படைத்த ஒருவனை கிறிஸ்தவன் என பிறர் எண்ணும் போது எத்தகைய பாதிப்பை அவன் மக்கள் மனதிலே ஏற்படுத்தி விடுகிறான் என்பதை சிந்தித்துப்பாருங்கள். என்றாலும், இத்தகைய தீய குணங்கள் கொண்ட ஒருவன் ஒருபோதும் உண்மையான கிறிஸ்தவனாக மாறியிருக்க மாட்டான். ஒருவேளை மாறியிருந்தாலும் கிறிஸ்தவத்தைப் புரிந்தவனாகவோ அதற்கு முக்கியத்துவம் கொடுத்தவனாகவோ இருந்திருக்கவே முடியாது.

''நான்'' பரம்பரையான ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவன்; குழந்தையாக இருக்கும் போதே தண்ணீர் தெளித்து 'ஞானஸ்நானம்' பெற்று 'கிறிஸ்தவ பெயரும்' சூட்டப்பட்டவன். எனவே நான் ஒரு பரம்பரைக் கிறிஸ்தவன்'' என சிலர் பீற்றிக் கொள்வர். ஆனால் வேதாகமம் இவர்களைக் கிறிஸ்தவர்கள் எனக் கூறுவதில்லை. கிறிஸ்தவனாக ஒருவரும் பிறப்பதில்லை. மாறாக, கிறிஸ்துவை விசுவாசித்து, கிறிஸ்தவனாக மாற அவர் நியமித்த கட்டளைகளைப்பின்பற்றி ஆவியில் மீண்டும் பிறப்பவனே கிறிஸ்தவனாகிறான்.

யார் கிறிஸ்தவன் என்ற கேள்விக்கு விடையாக வேதாகமம் போதிப்பது என்ன? கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு

அப்போஸ்தலர் பவுல் நினைப்பூட்டி எழுதுவதைப் பாருங்கள்: **''அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசீனரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை.''** அடுத்த வசனத்திலேயே அவர் குறிப்பிடுகிறார்: **''உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்''.** (1கொரி 6:9-11) வித்தியாசத்தைப் பாருங்கள். கிறிஸ்தவர்களாகு முன்னர் சகல பாவங்களையும் அவர்கள் செய்து வந்தனர். ஆனால் இப்போது கிறிஸ்தவரான பின்பு, பாவிகளுக்காக, சிலுவையில் கிறிஸ்து சிந்திய இரத்தத்தால் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டனர் என அவர் கூறுகிறார். (மத். 26:28 ; வெளி. 1:5). எனவே தான் அவர்கள் கிறிஸ்தவராகும்படி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டனர். மீண்டுமாக அப்போஸ்தலர் பவுல் கூறுவதைக் கேளுங்கள். **''பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் .......... நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாத படிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்''.** (ரோமர் 6 : 4,6). உங்களுடைய புதிய ஏற்பாட்டு பிரதியில் கலாத்தியர் 5:19-25ம் கொலோசியர் 3:1 முதல் 17 வசனங்கள் வரையும் தயது செய்து கவனமாகப் படித்துப் பாருங்கள். கிறிஸ்தவ வாழ்க்கை இவ்வுலகிலேயே ஒரு ஒப்பற்ற வாழ்க்கை என நீங்கள் புரிந்து கொள்வீர்கள். இப்படியான ஒரு வாழ்வை நாம் அடைந்து வாழ வேண்டுமென தேவன் விரும்புகிறார். பரலோகத்தில் நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையை இத்தகைய வாழ்வு நமக்களிக்கிறது. ஏனெனில் கிறிஸ்து சிலுவையில் மரித்து பாவிகளுக்கு இரட்சிப்பைப் பெற்றுத் தந்தார்.

நீங்கள் கிறிஸ்தவரா? - அதாவது, உண்மையான கிறிஸ்தவரா? இல்லையெனில், வேதாகமம் போதிப்பதைப் போன்று நீங்கள் கிறிஸ்தவராக மாறலாம். தேவன் இவ்வுலகில் உங்களை ஆசீர்வதித்து, இவ்வுலக வாழ்வுக்குப் பின்னர் பரலோகத்தில், கிறிஸ்துவுடன், நித்திய ஜீவனை அடையும் நம்பிக்கையை அளிப்பார்.

**சன்னி டேவிட்** **எஸ். எஸ். ராஜன்**

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

**பெற்றோரின் கடமை**

நீ உன் மகனைத் தண்டியாதிருந்தால் அவனை நேசிக்கவில்லை. நீ அவனை நேசித்தால் அவனைத் தண்டித்துத் திருத்துவாய். நீதிமொழிகள் 13:24

உன் மகன் இளவயதுள்ளவனாயிருக்கும் போதே அவனுக்கு ஒழுங்கைக் கற்றுக்கொடு. நீ அப்படிச் செய்யவில்லை என்றால், அவன் அழிந்து போவதற்குக் காரணமாயிருப்பாய்.
நீதிமொழிகள் 19:18

பிள்ளையின் மனதில் மூட்டத்தனம் இருக்கும். சிட்சையின் பிரம்பு அதை அவனை விட்டு அகற்றும். நீதிமொழிகள் 22:15

பிள்ளையைத் தண்டியாமல் விடாதே. அவனைப் பிரம்பினால் அடித்தால் சாகமாட்டான். நீ பிரம்பினால் அவனை அடித்தால் பாதாளத்திற்கு அவன் உயிரைத் தப்புவிப்பாய்.
நீதிமொழிகள் 23:13:14

# திருமணம்

## கடவுளால் உருவாக்கப்பட்டது

பின்பு கடவுளாகிய கர்த்தர் நிலத்திலிருந்து சிறிது மண்ணை எடுத்து மனிதனை உருவாக்கினார். அவன் நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதினார். அந்த மனிதன் உயிர்வாழத் தொடங்கினான்.

பின்பு கடவுளாகிய கர்த்தர், ''மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல. அவனுக்கு உதவி செய்யத் தகுந்த துணையை அவனுக்கு உண்டாக்குவேன்'' என்று கூறினார். எனவே அவர் நிலத்திலிருந்து சிறிது மண்ணை எடுத்து விலங்குகளையும் பறவைகளையும் உருவாக்கினார். அவைகளை மனிதனிடம் கொண்டு வந்தார். அவன் அவைகளுக்கு என்ன பெயரிடுவான் என்று கவனித்தார். இப்படியே அவைகள் பெயரிடப்பட்டன. மனிதன் எல்லாப் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் பெயரிட்டான். ஆனால் அவைகளில் ஒன்றும் அவனுக்குப் பொருத்தமான துணையாக இருந்து அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை.

பின்பு கடவுளாகிய கர்த்தர் மனிதனுக்கு அயர்ந்த நித்திரை வரச் செய்தார். அவன் நித்திரை செய்யும்போது அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சதையால் மூடினார். அந்த எலும்பினால் ஒரு பெண்ணை உருவாக்கி அவளை அவனிடம் கொண்டு வந்தார். மனிதன் அவளைப் பார்த்து,

''இவள் என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாமிசமுமாயிருக்கிறாள். இவள் மனிதனிலிருந்து உருவாக்கப்பட்டபடியால் 'மனுஷி' எனப்படுவாள் என்றார்.

## இருவர் ஒன்றாக இணைதல்

இயேசு மறுமொழியாக ''ஆதியிலே கர்த்தர் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார்'' என்று நீங்கள் வேதத்தில் வாசித்ததில்லையா? கடவுளும், ''இதன் காரணமாக மனிதன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடு இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒன்றாயிருப்பார்கள்'' என்று கூறினார். எனவே அவர்கள் இருவரல்ல; ஒருவரே. கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்றார்.

மத்தேயு 19 : 4-6

## திருமணத்தின் பொறுப்புக்கள்

ஒரு மனிதன் திருமணம் செய்வது நல்லது. மேலும் வேசித்தனம் சாதாரணமாகக் காணப்படுவதால் ஒவ்வொரு மனிதனுக்கும் மனைவி இருக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் கணவன் இருக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் மனைவிக்குரிய கடமைகளைச் செய்யவேண்டும். அவ்வாறே ஒவ்வொரு மனிதனும் கணவனுக்குரிய கடமைகளைச் செய்யவேண்டும். மனைவிக்கு சரீரத்தின்மேல் அதிகாரமில்லை. கணவனே அதற்கு அதிகாரி. அதேபோல் கணவனும் தன் உடலுக்கு அதிகாரியல்ல. மனைவியே அதற்கு அதிகாரி. தியானத்திற்குத் தடையிராதபடி இருவரும் சம்மதித்து சிறிது காலம் பிரிந்திருக்கலாம். மறுபடி ஒன்றுகூடி திருமணத்திற்குகான கடமைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு புலனடக்கம் இல்லாதபடியால் சாத்தான் உங்களைச் சோதிக்காதபடி இது உங்களைக் காக்கும். திருமணமானவர்களுக்கு நானல்ல கர்த்தரே கொடுக்கும் கட்டளையாவது: "மனைவி கணவனைப் பிரிந்து போகக்கூடாது. பிரிந்து சென்றால் அவள் விவாகமில்லாமல் இருக்க வேணடும். அல்லது கணவனோடு ஒப்புரவாக வேண்டும். கணவனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது.

1கொரி 7:1-5, 10-11

## கீழ்ப்படிதல், மரியாதை, அன்பு

கிறிஸ்துவில் நீங்கள் வைத்திருக்கும் நன்மதிப்பினாலே ஒருவருக்கொருவர் அடங்கி இருங்கள்.

கர்த்தருக்கு அடங்கியிருப்பதுபோல மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்கு அடங்கியிருக்க வேண்டும். கிறிஸ்து திருச்சபைக்கு அதிகாரியாய் இருப்பதுபோல கணவனும் மனைவிக்கு அதிகாரியாய் இருக்கிறான். அவரே தமது உடலாகிய திருச்சபையின் மீட்பர். சபையானது கிறிஸ்துவுக்கு அடங்கியிருப்பது போல, மனைவிமார்களும் எல்லாக் காரியத்திலும் கணவன்மார்களுக்கு அடங்கியிருக்கவேண்டும்.

கிறிஸ்து திருச்சபையை நேசித்து அதற்காகத் தம் உயிரைக் கொடுத்ததுபோல கணவன்மார்களும் தங்கள் மனைவிகளை நேசிக்க வேண்டும். கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து அது பரிசுத்தமும் மாசற்றதுமாயிருக்கும்படி அதைத் திருவசனத்தோடு கூடிய தண்ணீர் முழுக்கினால் தூய்மைப்படுத்தி, கறை திரை ஒன்றுமில்லாமல் மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும், அதற்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். அப்படியே கணவன்மார்களும் தங்கள் உடலில் அன்புகூருகிறது போலத் தங்கள் மனைவிகளிடம் அன்புகூற வேண்டும். தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில் தானே அன்பு கூருகிறான்.

(தன் சொந்த உடலை ஒருவனும் ஒருக்காலும் பகைத்ததில்லையே. கிறிஸ்து திருச்சபையைப் பாதுகாப்பது போல ஒவ்வொருவனும் தன் மனைவியை காப்பாற்றுகிறான். ''இதினிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுப் பிரிந்து தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்திருப்பார்கள்''. இந்த இரகசியம் பெரிது. கிறிஸ்துவையும் திருச்சபையையும் குறித்தே நான் இவ்வாறு கூறுகின்றேன். ஒவ்வொருவனும் தன்னில் அன்பு கூருகிறது போலத் தன் மனைவியிடம் அன்புகூரக்கடவன். மனைவியும் கணவனிடம் பயபக்தியாய் இருக்க வேண்டும்.

எபேசியர் 5:21-23

**கணவன் மனைவியை எவ்வாறு நடத்துவது?**

இப்படியே புருஷர்களே உங்கள் மனைவிகள் பெலவீன மானவர்கள் என்றறிந்து விவேகத்தோடு அவர்களோடு வாழுங்கள். கர்த்தரின் கிருபையை உங்களோடு கூட அவர்களும் பெற்றுக்கொள்வார்களானபடியால் அவர்களை மதித்து நடத்துங்கள். உங்கள் ஜெபத்திற்கு ஒன்றும் தடையிராதபடி இப்படிச் செய்யுங்கள்.

1 பேதுரு 3 : 7

**மனைவி கணவரை மகிழ்விப்பது எப்படி?**

அப்படியே மனைவிகளே நீங்கள் உங்கள் கணவன்மார்களுக்கு அடங்கியிருங்கள். அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் உங்கள் நல்நடக்கையினாலே நம்பிக்கைக்குட்படுவார்கள். நீங்கள் அவர்களோடு பேசவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் உங்கள் நடத்தை பயபக்தியுள்ளதும் கற்புள்ளதுமாயிருக்கிறதே. நீங்கள் சடை பின்னுதல், பொன்னாபரணங்களைத் தரித்தல் விலையுயர்ந்த ஆடை உடுத்துதல் போன்றவற்றால் உங்களை அழகுபடுத்திக்கொள்ளாமல், சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியை உங்கள் இருதயம் தரித்துக்கொள்ளக்கடவது. அதுவே கடவுளின் பார்வையில் மேலானது. அந்தப்படியே முற்காலத்தில் பக்தியுள்ள பெண்கள் கர்த்தரிடத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்திருந்ததோடு, தங்கள் கணவன்மார்களுக்கு அடங்கி நடந்தவர்களாய்த் தங்களை அலங்காரித்தார்கள். சாராள் அப்படியே நடந்து கொண்டாள். தன் கணவனாகிய ஆபிரகாமைத் தன் 'எஜமான்' என்று அழைத்தாள். நீங்கள் நன்மை செய்து எந்தத் திகிலுக்கும் பயப்படாதிருந்தால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

1 பேதுரு 3:1-10

**குழந்தைகளுக்கு ஆன்மீகப் பயிற்சி**

இஸ்ரவேலே! கேள். உன் தேவனாகிய கர்த்தரே நம் கடவுள். கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக. நான்

இன்று உனக்குக் கொடுக்கும் கட்டளைகளை நீ மறவாதே. அவ்வ-களை உன் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடு. நீ வீட்டில் இருக்கும் போதும் வெளியில் இருக்கும்போதும், படுத்திருக்கும்போதும் எழுந்திருக்கும்போதும் அவைகளைப்பற்றிப் பேசவேண்டும்.

உபாகமம் 6:4-7

''நல் வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு. முதிர் வயதிலும் அவன் அதை விடாதிருப்பான்.'' நீதிமொழிகள் 22:6

## பெற்றோருக்கு மக்களின் கடமை

நீ உருவாகக் காரணமாயிருந்த உன் தந்தைக்குச் செவி-கொடு உன் தாய்க்கு முதிர் வயதாகும்போது அவளை மதிப்புடன் நடத்து. நீதிமொழிகள் 23:22

## பெற்றோர்—பிள்ளைகள் உறவும் கடமையும்

குழந்தைகளே! உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே நீங்கள் செய்யும் சரியான காரியமாகும். ''நீங்கள் பூமியிலே நன்றாக வாழ்வதற்கும் உங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக'' என்பதே வாக்குத்தத்தத்தோடு கூடிய முதல் கற்பனை.

பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கோபமூட்டாமல், ஆண்டவருக்கேற்ற சிட்சையிலும் புத்திசொல்வதிலும் அவர்களை வளர்த்து வாருங்கள். எபேசியர் 6:1-4

## ஒழுக்கத்தின் பயன்கள்

''என் மகனே கர்த்தர் உன்னைத் திருத்தும்போது அதைக் கவனித்து நட.

அவர் உன்னைத் தண்டிக்கும்போது தளர்வடையாதே,

ஏனெனில் கர்த்தர் தாம் நேசிக்கிறவர்களை சிட்சிக்கிறார், தமது குமாரர்களாக ஏற்றுக் கொண்டவர்களைத் தண்டித்துத் திருத்துகிறார்.''

ஒரு தந்தையின் தண்டனையை ஏற்றுக் கொள்ளும்போது பொறுமையோடிரு. உன் பாடுகளினால் கடவுள் உன்னைத் தம் மகனாக நடத்துகிறார் என்று அறிந்து கொள்வார். தகப்பன் தண்டியாத மகன் உண்டோ? எல்லோருக்கும் கிடைக்கும் தண்டனையில் நீங்கள் பங்கு பெறாதிருந்தால் நீங்கள் புத்திரரல்ல. வேசி மக்களே. சரீரப்பிரகாரமான நமது தந்தைகள் நம்மை சிட்சித்து வந்தார்கள். நாம் அவர்களை மதித்து வந்தோம். அப்படியிருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு அடங்கி நடக்க வேண்டுமல்லவா? நமது சரீரப் பிதாக்கள் தங்களுக்கு நலமாகத்

தோன்றியபடி கொஞ்சக்காலம் நம்மைத் தண்டித்தார்கள். கடவுளோ நமது நன்மைக்கென்று, அவருடைய பரிசுத்தத்தில் நாம் பங்கடைவதற்கென்று நம்மைத்தண்டிக்கிறார். எந்த தண்டனையும் தற்காலத்தில் மகிழ்ச்சிகரமாகத் தோன்றாமல் துக்ககரமாகத்தோன்றும். பிற்காலத்திலோ அதனால் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்.

எபிரேயர் 12:5-11

வாலிபனே! உன் இளமையில் மகிழ்ந்திரு வாலிப நாட்களில் உன் இருதயம் உன்னை மகிழ்விக்கட்டும். உன் இருதயத்தின் வழிகளிலும் உன் கண்ணின் காட்சிகளிலும் நட. ஆனால் இவையெல்லாவற்றினிமித்தமும் கடவுள் உன்னை நியாய விசாரணைக்குக் கொண்டு வருவார்.

எனவே மனதிலிருந்து வருத்தத்தையும் தேகத்தினின்று நோவையும் விலக்கு. இளவயதும் வாலிபமும் மாயையே.

நீ உன் வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினைப்பாயாக. தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், 'எனக்குப் பிரியமில்லை' என்று சொல்லும் ஆண்டுகள் தோன்றாததற்கு முன்னும் உன் சிருஷ்டிகரை நினை.

**அன்பான மருமகள்**

அப்பொழுது நகோமி அவளிடம், ''ரூத் உன் சகோதரி தன் ஜனங்களிடத்திற்கும் தன் தெய்வங்களிடத்திற்கும் திரும்பிப்போய்விட்டாள். நீயும் உன் சகோதரியின் பின்னே திரும்பிப்போ'' என்றாள்.

ரூர் அவளுக்கு மறுமொழியாக, ''நான் உம்மோடே வராமல் உம்மை விட்டுத் திரும்பிப்போகும்படி என்னைக் கட்டாயப்படுத்தாதிருங்கள். நீங்கள் எங்கு சென்றாலும் நான் அங்கு வருவேன். உம்முடைய ஜனம் என் ஜனம். உம்முடைய தெய்வம் என் தெய்வம். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைவேன். அங்கேயே அடக்கம் பண்ணப்படுவேன். மரணமேயல்லாமல் வெறெதுவும் உம்மை விட்டு என்னைப்பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும், அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக் கடவர்'' என்றாள்.

அவள் தன்னோடு வர மன உறுதியாய் இருக்கிறதை நகோமி கண்டு, அப்புறம் அதைப்பற்றி அவளிடம் ஒன்றும் பேசவில்லை.

ரூத் 1:15-18



(24-ம் பக்கம் பார்க்கவும்)

## வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருமறை ஆசான் வாசகர்களின் முகவரிகளை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவரை தங்கள் முகவரிகளை எழுதி அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். நம்முடைய விலாசம் தான் அவர்களுக்குத் தெரியுமே என்று மெத்தனமாக இராதீர்கள். தயவு செய்து ஒத்துழையுங்கள். நன்றி.

1. பெயர்
2. முழு முகவரி
3 பின்கோடு
4. மாவட்டம்

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE - 638 001.